**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 58 of 2024

Depositions of PW -4 witness for ________ Prosecution / Defence / Court

Name : மாதையன்

Father's Name : த/பெ.

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of May** 2026.

**( எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்பொழுது திருப்பூர் மாவட்டம் பல்லடம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.02.2023 தேதி சூலூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது அன்றைய தினம் மதியம் 12.00 மணியளவில் முதல் நிலை காவலர் செல்லதுரை என்பவர் நிலைய அலுவலில் இருந்த பொழுது நாராயணஜெனா என்பவரின் மகன் பிரிஸிரா ஜனா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று வழக்கின் தன்மைப்படி சூலூர் காவல் நிலைய குற்ற எண் 116/2023 சட்ட பிரிவுகள் 279,337 இதச இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.**3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல்முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் முனிசாமி அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார்.

மேற்படி வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் முனுசாமி அவர்கள் அன்றைய தினமே மதியம் 01.00 மணி அளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பூபாலகிருஷ்ணன் மற்றும் வெங்கடாஜலபதி ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து உள்ளார். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் பிரிஸிரா ஜனா, அமுல்யா கோடா பூபாலகிருஷ்ணன், வெங்கடாஜலபதி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்து கோவை அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் சிகிச்சை பெற்று வந்த நாராயண அவர்கள் சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் மதியம் 2:30 மணியளவில் இறந்துவிட்டதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து வழக்கின் சட்டப்பிரிவை 279,337 **இதச வில்** இருந்து 279, 304 ஏ இதச என சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவத்தில் இறந்த நாராயணன்ஜெனா அவர்கள் இறப்பிற்கான உண்மையான காரணம் அறிய வேண்டி கோவை அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி சவக்கிடங்கின் முன்பாக பஞ்சாயத்தாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு உள்ளார். பிரேத விசாரணை சாட்சிகள் ரங்காநதி, ராஜசேகர், சந்தோஷ் குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் நாராயண ஜெனா அவர்களின் பிரேதத்தை வேண்டுகோள் கடிதத்துடன் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார். வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நான் தன்னிச்சையாக நிலையம் ஆஜரான எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலைய ஜாமீனில் விடுவித்தேன். வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி ஓட்டிச் சென்று விபத்து ஏற்படுத்திய வாகனத்தை வேண்டுகோள் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்றேன். ஆய்வறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மோட்டார் வாகன ஆய்வாளர் சண்முகசுந்தரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தில் காயமடைந்த நாராயண ஜெனா அவர்களின் இறப்பினை உறுதி செய்த கோவை மருத்துவமனை மருத்துவர் இந்துனேஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை மேற்கொண்ட கோவை மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவர் பாலவெங்கடபெருமாள் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கபெற்றேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8** குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலைக்காவலர் செல்லதுரை அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட

உதவியாளர் முனுசாமி அவர்களை விசாரித்தேன். இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 279, 304-ஏ இதச வின் கீழ் 19.05.2023 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் விபத்து சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது தவறுதலான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

(**Sd/- T. Arunkumar**)

**Signature of Witness** **Judicial Magistrate**,

**Sulur**